**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 22.09.2025**
**OS. No. 164/2023**
**வழக்கு சாட்சி PW.2–சுந்தரம் , த/பெ.பச்சமுத்து**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) தாவா சொத்து என்பது எது என்று எனக்கு தெரியுமா என்றால் என் வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், சக்குபந்தி ஆகியவைகள் எனக்கு தெரியுமா என்றால் என் வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். எந்த சொத்து என்று தெரிந்து நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் தெரியவில்லை. வாதி தனம் கந்துவட்டி போன்ற தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் அவ்வப்போது எனக்கு பணம் தேவைப்படம் போது வாதியிடம் நான் கடன் வாங்குவேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வாங்கவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் என் வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். வழக்கின் விவரங்கள் எதுவும் தெரியாமல், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும், அதனால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

2) வாதி அவரது கணவரை பிரித்து எத்தனை வருடங்களாக தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சுமார் 15 வருடங்களாக தனியாக வாழ்ந்து வருகிறார். வாதிக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பெண் பிள்ளைகள், ஒரு ஆண் பிள்ளை அந்த ஆண் பிள்ளை மட்டும் இறந்துவிட்டார், பெண் பிள்ளைகள் மட்டும் உள்ளனர். நான் சொல்வது தவறு என்றும், 2 பெண் பிள்ளைகள் தான் உள்ளதாக வாதியே ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. அந்த பெண் பிள்ளைகளுக்கும், வாதிக்கும் பேச்சுவார்த்தை உள்ளதாக என்றால் இல்லை, அவர்களுக்குள்ளும் பிரச்சனைதான் முன்னால் MLA திரு.காமராஜர் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவருக்கும் வாதிக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

3) வாதியினுடைய அண்ணன் மகனை எனக்கு தெரியுமா என்றால் உள்ளதாக தெரியும், நேரில் பார்த்ததில்லை. தாவா சொத்து இல்லாமல் 10 செனட் நிலம் வாதிக்கு உள்ளது என்றால் இருந்தது, அதை அவர் 5, 6 வருடங்களுக்கு முன்பு விற்றுவிட்டார். யாருக்கு விற்றார் என்றால் எனக்கு தெரியவில்லை. சொத்தை அனுபவிக்கவேண்டி தாவா வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு ஆதரவாக வாதி சொல்லியும், முன்னால் MLA திரு.காமராஜர் சொல்லியும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.